ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

e-Newsletter

Vol 02: No: 11 - December 2012

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

அனைவருக்கும் நத்தார் ~ புது வருட வாழ்த்துக்கள்

# இ. ப. மு. ஆ. வுக்கு இவ்வருடம் 174 முறைப்பாடுகள் பதிவு

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு 2012 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் வெளிவருகின்ற மும்மொழிகளலான பத்திரிகைகளுக்கு எதிராக 174 முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து இவ்வாறு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் 131 முறைப்பாடுகள் இ.ப.மு.ஆ.கு. வின் ஒழுங்குவிதிகளுக்கமைய விசாரணைக்கு ஏற்கக்கூடிய முறைப்பாடுகளாக உள்ளன. இந்த முறைப்பாடுகளில் 50 முறைப்பாடுகள் திருத்தம், விளக்கம், பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் என்ற அடிப்படையில் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன.

43 முறைப்பாடுகள், முறைப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கு உட்படாதவைகளாக இருந்தமையினால் அவை தொடர்பான விடயங்கள் விசாரணைக்குட்படுத்தப்படாமலே கோவைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றுள் இன்னும் சில நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்களுக்குட்பட்டவையாக இருந்துள்ளமையால் அவையும் (Sub-Judice) விசாரணைக்குட்படுத்தப்படாத முறைப்பாடுகளாகும்.

இந்த முறைப்பாடுகளின் போக்குகள் தொடர்பாக இ.ப.மு.ஆ.கு. கவனம் செலுத்திய போது அநேகமான முறைப்பாடுகள் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையை மீறியவைகளாக உள்ளன. இன்னும் சில முறைப்பாடுகள் பொறுப்பற்ற முறையிலான பிரசுரங்களோடு சம்பந்தப்பட்டவைகளாகவும் பொதுமக்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் விதமான புகைப்படங்களைப் பிரசுரித்தமை தற்கொலை தொடர்பான அறிக்கையிடல், இனத்தைக் குறிப்பிட்டதான அல்லது நீதிமன்ற வழக்குளோடு சம்பந்தப்பட்டவையாக என்ற அடிப்படையில் அமைந்துள்ளன.

அத்துடன் இ.ப.மு.ஆ.கு. தொடர்ச்சியாக பத்திரிகைகளில் பொதுமக்களை அறிவூட்டும் வகையில் தினமும் பிரசுரித்து வருகின்ற "பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம்" பற்றிய அறிவித்தல் காரணமாக பொதுமக்கள் நேரடியாக பத்திரிகைகளுக்கு அவற்றின் தவறைச் சுட்டிக்காட்டியதால் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் நேரடியாக திருத்தங்களை அல்லது பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய சந்தர்ப்பங்களையும் இங்கு குறிப்பிட முடியும். அவ்வாறாக 2012 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட பதிலளித்தல் அல்லது திருத்தல் ஆகியவற்றின் எண்ணிக்கை 344 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திருத்தங்களில் 285 சிங்கள் மொழி மூலமும் 06 தமிழ் மொழிமூலமும் 53 ஆங்கில மொழிமூலமாகவும் உள்ளது. பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை பத்திரிகைகளின் செய்தி அரைகளில் சந்தித்த போது பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையைப் பின்பற்றுவதால் அவர்களின் அறிக்கையிடல் மற்றும் பத்திரிகைத்துறையோடு இயைந்த தொழிலுக்கு கூடுதல் பாதுகாப்பையும் உத்தரவாதத்தையும் வழங்கக்கூடியதாக உள்ளது என்ற உண்மை எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. அத்துடன் பொறுப்புணர்வுடன் இத்தொழிலை மேற்கொள்ள வேண்டியதன் அவசியமும் இவ்வாறான சந்திப்புக்களின் போது வலியுறுத்தப்படுகின்றது.

ஊடகவியலாளர்கள் அறிக்கையிடல்களின் போது ஜனநாயகம், நல்லாட்சி, பேச்சுச் சுதந்திரம், மக்களின் அடிப்படை உரிமைகள், அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கி, அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பிரசுரிக்குமாறும் இத்தகைய சந்திப்புக்களின் போது ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றது.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக் கோவையை மீளாய்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப் பட்டிருக்கின்றது. இக்குழுவில், நிஹால் செனவிரத்ன, திருமதி கிசாலி பின்டோ ஜயவர்தன, கலாநிதி ரீ. தமிழ்மாறன், பேராசிரியர் திஸ்ஸ கரியவசம், பேராசிரியர் டியுடர் வீரசிங்க, சட்டத்தரணி ஜாவிட் யூசுப், சின்ஹ ரட்னதுங்க, மனிக் டி சில்வா, ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இந்த ஒழுக்கக்கோவை மீளாய்வு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

**முறைப்பாட்டுச் சுருக்கம்**

2012 ஜனவரி-டிசம்பர் வரையான காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்




## உள்ளே


- ஆறாவது முறையாக நடாத்தப்படும் அகில இலங்கை கட்டுரைப் போட்டி - பக்கம் 02
- கம்பாஹாவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - பக்கம் 02
- முப்படை அதிகாரிகளுக்கான ஊடக விழிப்புணர்வு நடவடிக்கை - பக்கம் 03
- இங்கிலாந்தின் நீதிபதி லோசன் பிரபு அறிக்கை சிபாரிசுகள் கண்ணோட்டம் - பக்கம் 03

# ஆறாவது முறையாக நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டி

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கல்வி அமைச்சுடன் இணைந்து, உயர்தர வகுப்பு மாணவர்களிடையில் ஆறாவது முறையாகவும் அகில இலங்கை ரீதியாக கட்டுரைப் போட்டி இவ்வருடம் நவம்பர் டிசம்பர் மாதங்களில் நடத்தப்பட்டது.

கல்வி அமைச்சு 2012 ஆம் வருடம் 12/13 ஆம் வருட மாணவர்களிடையில் அகில இலங்கை ரீதியில் நடத்திய ஆக்க திறன் மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றிமாகாண மட்டங்களில் வெற்றிபெற்ற மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊடகங்களின் சரியான செயற்பாடு மற்றும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பாக மாணவர்க ளிடையேயும் பொதுமக்கள் மத்தியிலும் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடத்தப்பட்ட இக்கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு மொழிமூலமும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு முறையே ரூபா. 5000.00, ரூபா. 4000.00, ரூபா. 3000.00 என்ற அடிப்படையில் பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஊடகங்கள் மற்றும் ஊடக செயற்பாடு என்பவற்றை கருப்பொருளாகக் கொண்டு தலைப்புக்கள் வழங்கப்பட்டு ஒரு மணித்தியாலமும் 30 நிமிடங்களை செலவிட்டு 750-1000 சொற்களுக்கிடைப்பட்டதாக பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு கட்டுரை எழுதப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு இக்கட்டுரைப் போட்டிக்கு நாடளாவிய ரீதியில் இருந்து மும் மொழிகளிலும் ஏராளமான கட்டுரைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இவர்களில் மும்மொழிகளிலும் முதலாம் இரண்டாம் மூன்றாம் என்ற அடிப்படையில் 09 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த 21ஆம் திகதி இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வெற்றியாளர்கள் பெயர் விபரம் வருமாறு:-

### பரிசில்களை வென்றவர்கள்

**சிங்கள மொழி மூலம்**

- முதலாம் இடம் - கிரிசாந்தி நாலிகா ரத்நாயக்கா - கலென் பிந்துனு வெவ மத்திய கல்லூரி - அநுராதபுரம்
- இரண்டாம் இடம் - ஹெட்டியாரச்சி சானுக பிரசாதினி - புனித கப்ரேல் மகளிர் கல்லூரி - ஹட்டன்
- மூன்றாம் இடம் - ஹர்ஷிகா ருவந்திகா பியசிரி - பதுளை

**தமிழ் மொழி மூலம்**

- முதலாம் இடம் - எம்.எம்.எஸ் நஸீஹா - எஹடுமுல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம் - நாகொல்லாகொட - குளியாபிடிய
- இரண்டாம் இடம் - எஸ். ருவுதரன் - நாவிதன் வெளி அன்னாமலை மகா வித்தியாலயம் - நாவிதன் வெளி
- மூன்றாம் இடம் - ஆர்ஏ. மாஹிரா பேகம் - அல்-ரிபாய் மகா வித்தியாலயம் -பொலன்னறுவை

**ஆங்கில மொழி மூலம்**

- முதலாம் இடம் - அமிஸ்தினி நக்கீரன் - வேம்படி மகளிர் கல்லூரி-யாழ்ப்பாணம்
- இரண்டாம் இடம் - கசுன் சந்தீப ஜயகொடி - தர்மராஜ கல்லூரி - கண்டி
- மூன்றாம் இடம் - அஷ்வினி இரோசிகா பாலசந்திரன் - நல்லாயன் கன்னியர் மடம் - கொட்டாஞ்சேனை






இ.ப.மு.ஆ கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்திய அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டியில் மும்மொழிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிக்கும் வைபவம் இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். படத்தில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருடன் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக்குழு தலைவர் சாம் விஜேசிங்க உரையாடுவதையும் பரிசில்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் குழுவாக நிற்பதையும் படங்களில் காணலாம்.

# கம்பஹா மாவட்டத்தில் ஊடக விழிப்பூட்டல் நிகழ்வுகள்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு கம்பஹா மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நடத்திய ஊடக அறிவூட்டல் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சி 2012 டிசம்பர் 11 ஆம் திகதி கம்பஹாவில் அமைந்துள்ள சாகெத மெதுர ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த அறிவூட்டல் நிகழ்ச்சிக்கு சிவில் சமூக பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பற்றி சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு அறிவூட்டப்பட்டது. பத்திரிகைகளில் விடயங்கள் தவறான முறையில் பிரசுரிக்கப்பட்டால் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் அவதூறாக பிரசுரிக்கப்பட்டால் என்ன செய்வது, அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாக அறிவூட்டப்பட்டது.

முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள், அரசாங்கத்துறை அதிகாரிகள், சிவில் சமூக தலைவர்கள் உட்பட பலர் இதில் பங்குபற்றினர்.

அத்துடன் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத் துறைசார் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் பயிற்சி கருத்தரங்கும் நடத்தப்பட்டது. இதில் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 30 ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர். அத்துடன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வெளியீடுகள் அப்பகுதியில் உள்ள நூலகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

ஊடகத்துறையில் ஆர்வம் காட்டும் இளைஞர்களுக்கான பயிற்சி செயலமர்வொன்றும் நடத்தப்பட்டது. இதில் 37 இளைஞர்கள் பங்குபற்றினர். இவர்களுக்கான பயிற்சி நெறியை பிரபல ஊடகிவயலாளர் எம்.எஸ்.எம்.ஐயூப் நடத்தினார். இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரிகளான கமல் லியனாரச்சி, எம்.எஸ்.அமீர் ஹுசைன் ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளை நடத்தினர்.

# முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகளுக்கான ஊடக அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை

இலங்கை பத்தரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களால் பின்பற்றப்பட வேண்டிய பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவை பற்றி பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோரை அறிவூட்டும் வகையிலான நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது. நாட்டின் பல மாவட்டங்களில் இவ்வாறான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதன் ஓர் கட்டமாக இராணுவம், பொலிஸ், கடற்படை, விஷேட அதிரடிப்படை ஆகிய அதிகாரிகளை அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று கடந்த 2012 நவம்பர் மாதம் 06 ஆம் திகதி இந்த ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் முப்படைகளையும் சேர்ந்த ஊடக அதிகாரிகள், பேச்சாளர் உட்பட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.








இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட அதிகாரிகளுக்கு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் நடவடிக்கைகள், முறைப்பாட்டு ஒழுங்கு விதிகள், மற்றும் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பாக முறைப்பாட்டு பொறுப்பதிகாரி கமல் லியனாரச்சி, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் பிரதம நிறைவேற்று அதி-காரி சுகுமார் ரொக்வூட் ஆகியோர் விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட அதிகாரிகளில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

---

### இங்கிலாந்தின் நீதிபதி லோசன் பிரபு அறிக்கை

## முக்கிய சிபாரிசுகள் ஒரு கண்ணோட்டம்

இங்கிலாந்தில் பிரபலம் வாய்ந்த பிரமுகர்களது தொலைபேசிகளை ஒட்டுக்கேட்டு செய்தி மற்றும் தகவல்களை வெளியிட்டு தனிப்பட்ட இரகசியங்களை அம்பலப்படுத்திய குற்றச்சாட்டுக்கு இலக்காகிய "நியுஸ் ஒப்த வேர்ல்ட்" பத்திரிகையின் செயற்பாடுகள் மற்றும் இரகசியமான நடத்தை தொடர்பாக ஆராய்ந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பிரபலமான நீதிபதி பிரபு லோசன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. இக்குழு அதன் அறிக்கையை இங்கிலாந்து பாராளுமன்றத்திடம் 2012 நவம்பர் 29 ஆம் திகதி லோசன் பிரபு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இங்கிலாந்தில் சுமார் 168 வருடங்களாக வெளிவந்த அப்பத்திரிகை 2011 ஜுலை மாதம் மூடப்பட்டதோடு சர்ச்சை ஆரம்பமாகியது. தொடர்பான நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டது. பிரபு லோசன் அறிக்கையில் செய்யப்பட்டுள்ள சிபா-ரிசுகள் வருமாறு:-

- பத்திரிகைகள் சஞ்சிகைகள் என்பன தொடர்ச்சியாக சுயகட்டுப்பாட்டு நடைமுறை ஒழுக்கக்கோவையைப் பின்பற்ற வேண்டும்.
- பத்திரிகை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அல்லது அதுதொடர்பாக கருமமாற்றக்கூடிய அமைப்பொன்று இருக்க வேண்டும். அதன் மூலம் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் என்பன கண்காணிப்புச் செய்யப்பட வேண்டும்.
- இத்தகைய குழு அல்லது ஆணைக்குழு எந்நதவிதமான அழுத்தங்களுக் கும் செல்வாக்கிற்கும் உட்படாது சுதந்திரமாகவும் சுயாதீனமா-கவும் இயங்க வேண்டும். அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் அல்லது வேறும் கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் இயங்க வேண்டும். அத்துடன் இத்தகைய ஆணைக்குழுவை நிர்வகிப்பதற்கு சுயாதீனமான பணிப்பாளர் சபையொன்றும், தலைவர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும்.
- சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை மற்றும் கண்காணிப்பு சபையானது அச்சு ஊடகத்துறையை சிறந்ததும், உன்னதமான நிலைக்கு இட்டுச் செல்வது, இத்துறையின் மேம்பாடு என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். இந்த சபை பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், பாரபட்சமற்ற முறையில் அந்த முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் ஊடக சுதந்திரத்தை பாதுகாத்து உறுதிப்படுத்தல் போன்ற குறிக்கோள்களுக்காக செயற்பட வேண்டும்.
- ஊடக சுதந்திரத்திற்கு தடையாக உள்ள சட்டதிட்டங்கள் தளர்த்தப் பட்டு இவ்வாறு நியமிக்கப்படும் சபை ஊடாக ஊடக அமைதி மற்றும் சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்ய வேண்டும். இந்த சபையின் அங்கத்துவம் தொண்டர் அடிப்படையிலாக அமைய வேண்டும். ஊடகத்துறையிலான முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் இந்த ஆணைக்குழு அல்லது சபை தேவையான ஒழுங்குவிதிகளையும் சட்டதிட்டங்களையும் முன்வைத்து அதனைக் கொண்டு நாட்டில் சாதகமான ஊடக கலாச்சாரம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் ஒலிபரப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கண்காணிப்புச் செய்யும் வகையிலும் ஒழுங்கு விதிகள் முன்வைக்கப்பட வேண்டியதோடு ஒலிபரப்பு நிலையங்களும் தமது கடமைகளை முடை-றயாகவும் பாதிப்புக்களைத் தடுக்கும் வகையிலும் செயற்பட வேண்டும்.
- புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற ஆணைக்குழுவுக்கு குற்றமிழைக்கும் பத்திரிகைகளுக்கு எதிராக அபராதம் விதிக்கும் அதிகாரமும் வழங்கப்பட வேண்டும். "காவல் நாய்" என்ற நிலையில் இருந்து செயற்படும் இந்த ஆணைக்குழு பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக்கோவையை மீறும் பத்திரிகைகள் தொடர்பாக புலனாய்வுகளை மேற்கொள்ளும் அதிகாரம் இருக்க வேண்டியதோடு தவறான வழியில் செல்லும் பத்திதிரிகைகள் சஞ்சிகைகளை ஒழுங்கான வழியில் செலுத்தும் அதிகாரமும் இருக்க வேண்டும்.

# கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்




இ.ப.மு.ஆ கம்பஹா மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கும் நடத்திய கலந்துரையாடலின்போது பிடிக்கப்பட்ட படம். ஆணைக்குழுவின் சிங்கள மொழிப்பிரிவு முறைப்பாட்டு அதிகாரி கமல் லியனாரச்சி உரையாற்றுவதையும் டெய்லி மிரர் பத்திரிகையின் செய்திப்பிரிவு ஆலோசகர் எம்.எஸ்.எம்.ஐயூப், இ.ப.மு.ஆ.வின் தமிழ் ஊடகப்பிரிவு முறைப்பாட்டு அதிகாரி எம்.எஸ். அமீர் ஹுசைன் ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.



கலந்து கொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள்



ஊடக பயிற்சி செயலமர்வில் பங்குபற்றிய இளைஞர்கள்



டெய்லி மிரர் பத்திரிகையின் செய்திப்பிரிவு ஆலோசகர் எம்.எஸ்.எம்.ஐயூப் உரையாற்றுகையில்



சிங்கள மொழிப்பிரிவு முறைப்பாட்டு அதிகாரி கமல் லியனாரச்சி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையில்



நிகழ்வில் பங்குபற்றிய ஊடகவியலாளர்கள்

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் டி சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சீதா ரஞ்சனி, ஜி. கொத்திகொட, மற்றும் அஜந்தா ஹப்புஆராச்சி.

## முரண்பாட்டுத் தீர்வுக்குழு (DRC)

திரு.சாம் விஜேசிங்ஹ (தலைவர்), கலாநிதி. தேவதாசன் நேசையா, திரு. ஜாவிட் யூசுப், திரு. டியோன் சூமன், திரு. லுசில் விஜேவர்தன, திருமதி. விஜித பெர்ணாந்து, திரு. சிறி ரணசிங்க, திரு. தயா லங்காபுர, திரு. பிரமோத டி சில்வா, மற்றும் திரு.வி.தேவராஜ்.

## இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்

சுகுமார் ரொக்வூட் – பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி.

Editor: Sukumar Rockwood - PCCSL
Design & Layout by : Priyadharshini - *SLPI*